EMBASSY OF JAPAN

No. 20, Gregory's Road, Colombo 7, Sri Lanka
Tel: +94-11-2693831~3, Fax: +94-11-2698629
E-mail: cultujpn@co.mofa.go.jp

From
the People of Japan

PRESS RELEASE

11th March, 2014

# PRESS RELEASE

**ஜப்பான் முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் புணர்வாழ்விற்கும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திலுள்ள பெண்களை வழுவூட்டவும் UN Habitat நிறுவனத்திற்கு உதவுகிறது.**

ஜப்பானிய அரசாங்கம் ''முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் சமூக கீழ்க்கட்டமைப்பு புணர்நிர்மானம், வாழ்வாதார மேம்பாடு மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள பெண்களை வழுவூட்டும் செயற்திட்டத்திற்கு'' 377 மில்லியன் யப்பானிய யென் நிதிப்பங்களிப்பை (அண்ணளவாக 3.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) UN Habitat நிறுவனத்தினூடாக வழங்குகிறது. இது தொடர்பான ஒப்பந்தம் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் நொபுஹிதொ ஹொபொ மற்றும் ஐக்கிய நாடுகள் வாழ்விட நிறுவனத்தின் சிரேஸ்ட தொழில்நுட்ப அலோசகர் திரு. டிம் மக்நெயர்ஆகியோருக்கிடையே ஜப்பானிய தூதுவர் இல்லத்தில் மார்ச் 11 2014 அன்று கைச்சாத்திடப்பட்டது.

நீடித்து நிலைத்த புணர்வாழ்வு மற்றும் மீள்கட்டுமாண உதவி அடிப்படை வசதிகளின் மேம்பாடு என்பன ஊடாக வட மாகாணத்திலுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக்களப்பு மாட்டங்களின் ஒருமைப்பாட்டுத் தேவைகளை நிறைவேற்றுவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இச்செயற்த்திட்டத்தின் பிரதான உள்ளடக்கங்களாவன (1) பழுதான அல்லது சிதைவடைந்த சிறிய சமூக கீழ்க்கட்டமைப்பின் புணர்நிர்மாணம் மற்றும் மீள்கட்டுமாணம் (2) நுளைவுப்பாதைகள், சரக்குச்சேமிப்பு இடங்கள், பாசன வாயக்கால்கள் மற்றும் திறன் அபிவிருத்தி மூலமாக பொருளாதார வாய்ப்புக்களை ஏற்படுத்தல் (3) தொழிற் பயிற்சி, தலைமைத்துவ பயிற்சி மற்றும் சேமிப்பையும் கடன்களையும் அறிமுகபபடுததி பெண்களை வழுவூட்டல் (4) காட்டு யானைகளால் அவதிப்படும் சமூகங்களின் வாழ்க்கையை எளிதாக்குதல்.

இத்திட்டம் ஜப்பானால் 3.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியளிக்கப்பட்ட வட மாகாணத்தின் முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் சமூக கீழ்க்கட்டமைப்பு புணர்நிர்மானம் மற்றும் வசதிகளை ஏற்படுத்தும் செயற்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வனுகுமுறை நீடித்த சமூக பொருளாதார அபிவிருத்தியை உருவாக்கவும் பெண்களின் உரிமைகளை பாதுகாக்கவும் வழுவூட்டவும் பொருத்தமான சூழலை சந்தேகமின்றி ஏற்படுத்தும்.

ஜப்பானிய அரசாங்கமானது முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மீளெழுச்சிக்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் தனது துரிதமான உதவிகளை இலங்கை அரசாங்கம, சர்வதேச சமூகம் மற்றும் அரச சார்பற்ற நிறுனங்களின் கூட்டுறவுடன் தொடர்ந்து வழங்கும்.

*************************************************************

Please contact the Economic Cooperation Section of the Embassy for further information.
Tel: 011-269-3831~3 (ext.227)